**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No. 43/2020 தேதி- 11.03.2026
(DW.1) – சாந்தா

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

1.நான் இந்த வழக்கில் 8 வது பிரதிவாதி என்றால் சரிதான். என் கணவர் சிங் இந்த வழக்கில் 5 வது பிரதிவாதி என்றால் சரிதான். 5 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை 2021 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.07.2010 ஆம் தேதியில் என் கணவர் என் பெயருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் செல்லுபடியாகாது என்று கோரியும், பாகம் கோரியும் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன ஆவணம் இந்த வழக்கின் இரண்டாவது பட்டிகை சொத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் என் பிள்ளைகள் என்றால் சரிதான். 2021 ல் நாங்கள் தாக்கல் செய்த எதிருரையில் மேற்சொன்ன செட்டில்மென்ட் ஆவணத்தை பற்றிய விவரங்கள் ஏதும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளோம். வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றிய விவரங்களை எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3.30.08.2010 ஆம் தேதியில் 4 மற்றும் 5 பிரதிவாதிகள், 6 மற்றும் 7 பிரதிவாதிகள் பெயரில் வா.சா.ஆ.3 செட்டில்மென்ட் ஆவணத்தை எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு உட்பட்ட சொத்து தான் இவ்வழக்கின் இரண்டாவது பட்டிகை சொத்து என்றால் சரிதான். என் கணவர் உயிரோடு இருந்த போது கூட்டாக சேர்ந்து 5 முதல் 8 வரையான பிரதிவாதிகள் எதிருரையை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் சட்டபடி செல்லத்தக்க ஆவணம் எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4.4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு வாக்கால் பாகம் கிடைத்ததாக எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளோம். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேற்சொன்ன வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ-2

ஆவணத்தில் வாக்கால் பாகத்தின் அடிப்படையில் கிடைத்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வாதி தரப்பில் சாட்சியம் அளித்த பிறகு தான் கூடுதல் எதிருரையை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். கூடுதல் எதிருரையில் தான் முதன்முதலாக, சீமாட்டி இறந்து வாக்கால் பாகம் ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

5.வாக்கால் பாகத்தின் படி 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு சமமாக பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வாக்கால் பாகம் ஏற்பட்டு இருந்ததால், என் கணவர் இறப்பதற்கு முன்பே தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் அதை பற்றிய குறிப்புகள் சொல்லப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு வாக்கால் பாகம் ஏற்படாததால் தான் கூடுதல் எதிருரையில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாக்கால் பாகத்தின் அடிப்படையில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் சமமாக கிடைத்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சீமாட்டி இறந்த பிறகு ஆண்மக்களாகிய எங்களுக்கும் எங்கள் சகோதரர் செல்வனுக்கும் உரிமைப்பட்டது, செல்வனுக்கு திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதால், எங்களுக்கு தான் உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7.வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தும் சமயத்தில் 4 வது பிரதிவாதி ராவ் என்பவர் உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். ராவ் துரைசாமியின் மகன் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த சமயத்தி 4 வது பிரதிவாதி ராவ் உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். அவர் உயிரோடு இருந்த சமயத்தில் அவர் இந்த வழக்கில் வக்காலத்தும், எதிருரையும் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். 4 வது பிரதிவாதியின் தன்னுடைய எதிருரையில் நான் திருமணமாகதவர் என்றும், என்னுடைய விகிதத்தை 3 வது பிரதிவாதியான ரெஞ்சிதத்திற்கு ஒதுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

8.4 வது பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. 4 வது பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்த போதே இறந்துவிட்டார்

என்றால் சரிதான். 4 வது பிரதிவாதியின் வாரிசுதாரர்களாக வாதிகளும், பிரதிவாதிகளும் இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்சொன்ன தரப்பினர்களை சேர்ப்பதற்கு என் தரப்பில் எந்த ஆட்சேபணையும் செய்யப்படவில்லை என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது.

9.09.04.2022 ம் தேதியில் நான் மீனாட்சி என்பவர் பெயருக்கு ஒரு விலை ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரத்தை கூடுதல் எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணம் என் தரப்பில் பி.வா.சா.ஆ.9 ஆவணமாக குறியீடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ராஜ்குமார் என்பவர் என்னுடைய மகன் என்றால் சரிதான். ராஜ்குமார் இந்த வழக்கில் 7 வது பிரதிவாதி என்றால் சரிதான். மேற்சொன்ன ராஜ்குமாரின் மனைவி தான் மீனாட்சி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என் மருமகளுக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணம் 2022 ல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் நீதிமன்றத்தில் இருந்து அனுமதி எதுவும் பெறப்படாமல் எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

11.பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் வழக்கு பட்டிகையின் இரண்டாவது இனச்சொத்தில் 3.750 சென்ட் சொத்தில் உட்பட்ட 1.875 சென்ட் வீடு உட்பட உள்ள இடமாகும் என்றால் சரிதான். மேற்சொன்ன வீடானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் குடும்ப வீடு என்றால் சரிதான். மேற்சொன்ன வீட்டிற்கு 50 வருட பழக்கமுடைய வீடு என்று பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணம் 04.02.2022 அன்று ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

12. தாவா சொத்தில் பெண்பிள்ளைகளுக்கு உரிமையில்லை நான் சொல்வது சட்டபடி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல, திருமணத்தின் போது அவர்களுக்கு நகைகள் வழங்கப்பட்டுள்ளது. சீமாட்டியும், துரைசாமியும் உயிரோடு

இருக்கும் வரை எந்த பிள்ளைகளுக்கும் எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் இறந்த பிறகும் தாவா சொத்து சம்மந்தமாக பாகப்பத்திரம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான், வாக்கால் பாகம் ஏற்படுத்தப்பட்டது.

13. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள ஒன்றாவது இனச்சொத்து கல்லறை இடம் என்று முதன்முதலில் என் நிரூபண வாக்குமூலத்தில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கல்லறை தோட்டம் என்று 5 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையிலும், கூடுதல் எதிருரையிலும் சொல்லப்படவில்லை என்றாலும், நிரூபண வாக்குமூலத்தில் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் சுகந்தியின் பிள்ளைகள் என்றால் சரிதான். தாயாருக்கு உரிமையுள்ள சொத்தை பொறுத்து தான் 1/6 பாகம் கேட்டு வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

14. வாதிகளுக்கு பாகம் வழங்கக் கூடாது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளும் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றாலும், அவர்களின் உரிமைக்கு எதிராக ஏற்படுத்த வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.9 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.